**சுற்றறிக்கை இல: 02/2020**

**சகல கூட்டுறவுசங்கங்களின் தலைவர்கட்கும்**

**2017 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க 8மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணியாட்தொகுதிக்கு ஆட்சேர்ப்பு செய்துகொள்வதற்கான தகைமைகளை நிர்ணயம் செய்தல்.**

வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுசங்கங்களின் பணியாட்தொகுதிக்கு உள்வாரி மற்றும் வெளிவாரியாக ஆட்சேர்ப்பதிலும் பதவிமாற்றங்களுடனான பதவி உயர்வுகளை வழங்குவதிலும் எதிர்நோக்கப்படும். சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு, பதவித்தகைமைகள் யாவும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட இத்தகைமை நிர்ணயம் தொடர்பான சுற்றறிக்கை வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

இச்சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த பதவி தகைமைகள் தொடர்பானசகலசுற்றறிக்கைகளும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன. எனினும் முன்னர் நடைமுறையிலிருந்த தகைமை நிர்ணயச்சுற்றறிக்கைகளின்படி வழங்கப்பட்ட நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் எதுவித பாதிப்புக்கும் உள்ளாகமாட்டாது.

இச்சுற்றறிக்கையின் படி ,ஏற்கனவே நடைமுறையில் இருந்த பதவிகள் யாவும் பின்வரும் மூன்று பிரதான வகுதிகளின் கீழ் நிலைப்படுத்தப்படுகின்றன.

i. முகாமை நிலைப்பதவிகள்
ii. மேற்பார்வை நிலைப்பதவிகள்
iii. நிறைவேற்றாளர் நிலைப்பதவிகள்

இம்மூன்று வகுதிகளும் இச்சுற்றறிக்கையின் பின்னிணைப்பாகத் (இணைப்பு-1) தரப்பட்டுள்ளன.

இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத யாதேனும் விசேட பதவிகள் உருவாக்க வேண்டிய தேவையெழும் பட்சத்தில்,குறித்த கூட்டுறவுச்சங்கம் அப்பதவிகளுக்கான தகைமைகளைப் பிரேரித்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடைய விதப்புரையுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவற்றை பரிசீலிக்கும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சம்பள அளவுத்திட்டத்துடன் கூடிய பதவித்தகைமைகளை நிர்ணயம் செய்து இச்சுற்றறிக்கையின் திருத்தங்களாக வெளியிடும்.

இச்சுற்றறிக்கையை வடக்கு மாகாணசபையின் உத்தியோக பூர்வமுகவரிwww.np.gov.lkஇன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவுஊழியர் ஆணைக்குழுவின் கீழ் (https://np.gov.lk/cooperative-employees-commission-circulars-2020/என்ற இணைப்பில்) பார்வையிட்டுக்கொள்ளும் படியும் இச்சுற்றறிக்கை தொடர்பில் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை 10.11.2020 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு கிடைக்கப்பெறும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து இறுதிப்படுத்தப்படும் தகைமைநிர்ணயச் சுற்றறிக்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.